O.S. No: 136/2019
பெயர்: சாந்தி
**பி.சா. 1**
12-09-2025
**குறுக்கு விசாரணை**

நான் தாவா சொத்து எனக்கு சொந்தமானது . அது வீடும், அடி மனையும் சேர்ந்தது . அதை நான் 20/04/2005 இல் காத்தான் என்பவரிடம் கிரைய பெற்றுள்ளேன் என்றால் ஆமாம் . தாவா சொத்தில் தான் நான், என் கணவர் ஜீவாநந்தம் மற்றும் என் குழந்தைகளுடன் வசித்து வருகிறேன் என்றால் ஆமாம் . என் மாமனார் பெயர் மாரிமுத்து . வாதி ராஜு எங்கள் ஊர் தான் . நான் தாவா சொத்தை விற்பதற்காக வாதிக்கு 17/10/2018 இல் ஒரு கிரைய ஒப்பந்தம் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய தொகை ரூபாய் 14,10,000/- என்றாலும் நான் கிரைய ஒப்பந்த தேதியில் ரூபாய் 10,10,000/- பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல . நான் வாங்கவில்லை . வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் உள்ளது என் கையெழுத்து தான். அதில் முதல் சாட்சியாக என் கணவர் தான் கையெழுத்து போட்டிருக்கிறார் என்றால் ஆமாம் . கரும்பு விவசாயம் பண்ணுவதற்காக ராஜும் என் வீட்டுக்காரரும் போடச்சொன்னார்கள். என் கணவரும் வாதியும் துபாயில் வேலை பார்த்தார்கள். அவ்வாறு என் கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்தார் என்பதை காண்பிப்பதற்கு பாஸ் போர்ட் காண்பிக்க முடியுமா என்றால் முடியாது. வாதி ராஜு எங்கள் ஊரில் விவசாய வேலை தான் பார்த்து வந்தார் என்றாலும் வெளிநாட்டில் வேலை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. என் கணவரும் வாதியும் சேர்ந்து கூட்டாக கரும்பு வியாபாரம் செய்தார்கள். எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை வியாபாரம் செய்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. என் கணவருக்கு வாதி எந்த மாதம், வருடம் தேதியில் பணம் வாங்கி கொடுத்தார் என்று தெரியாது . நானும் என் கணவரும் எழுதாத வேற்றுபேப்பரில் கையெழுத்து போட்டு கொடுத்தோம். அந்த மாதி, தேதி வருடம் தெரியாது . நானும் என் கணவரும் வெறும்பேப்பரில் கையெழுத்து போடவில்லை என்றாலும் தாவா சொத்தை விற்கிறோம் என்று சொல்லி கிரைய ஒப்பந்தத்தில் ரூபாய் 10,10,000/- பெற்றுக்கொண்டு நானும் என் கணவரும் கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரியல்ல . எங்கள் சொத்திற்கு தென்புறம் வாதிக்கு 5 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் சரி . வாதி எங்கள் சொத்தை எந்த தேதியில் ஆக்கிரமிப்பு செய்ய வந்தார் என்று தேதி தெரியாது . போலிசில் வாதி மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை . நான் கலியமூர்த்தி

என்பவரிடம் 25/07/2018 இல் இந்த சொத்தை கிரையம் வாங்கியிருக்கிறேன் என்றால் ஆமாம் . அந்த கிரைய பத்திரத்தின் கணினி நகல் **வா.சா.ஆ. 6 ஆகும்.** அதில் என் கையெழுத்து உள்ளது என்றால் ஆமாம். நான் 13/11/2007 இல் இஸ்மாயில் என்பவருக்கு ஒரு சொத்தை விற்றிருக்கிறேன் என்றால் ஆமாம். **அது வா.சா.ஆ. 7** ஆகும். வாதி கிரைய ஒப்பந்தப்படி கிரைய சாசனம் செய்து கொடுக்கச் சொல்லி எனக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் ஆமாம் . அதற்கு நான் பதில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கொடுத்துள்ளேன். 25/12/2018, 16/01/2019, 01/05/2019 ஆகிய தேதிகளில் வாதி கிரைய பாக்கி தொகையுடன் என்னை அணுகி பணத்தை பெற்றுக்கொண்டு சுத்த கிரைய சாசனம் செய்துக்கொள்ள வேண்டினார் என்றால் சரியல்ல . 22/08/2019 அன்று மீண்டும் வாதி என்னை அணுகி கேட்ட போது தான் நான் சாசனம் செய்துக்கொடுக்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல . வா.சா.ஆ. 1 கிரைய ஒப்பந்தப்படி கிரைய சாசனம் செய்துக்கொடுக்க நான் கடமை பட்டவர் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் அத்து மீறி என் சொத்தில் பிரவேசித்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்ட ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றாலும் நான் கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.